## டெல்லி முதலமைச்சர்

# அர்விந்த் கெஜ்ரிவால் பிறந்தநாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஆக. 17-

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களின் பிறந்தநாளை யொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கேஜ்ரிவால் அவர்களுக்குப் பிறந்தநாள் நல்வாழ்த்துகள்.**

**தங்களது கட்சி தங்களுடன் உறுதியாக நிற்பதைப் போலவே, மக்களும் அதே அளவு உறுதியுடன் தொடர்ந்து தங்களுக்கு ஆதரவாக நிற்பார்கள். மக்களுக்குப் பணியாற்றுவதில் தாங்கள் கொண்டுள்ள சோர்வறியா அர்ப்பணிப்பை வரும் ஆண்டு மேலும் வலுப்படுத்தட்டும்!**



இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## பவானி சாகர் அணையிலிருந்து

# விவசாயிகள் நலனுக்காக 120 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது!

### அமைச்சர்கள் சு.முத்துசாமி – மு.பெ.சாமிநாதன் பேட்டி!

ஈரோடு, ஆக.17-

ஈரோடு மாவட்டம், பவானி சாகர் அணையிருந்து விவசாய பாசனத்திற்காக 120 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது என்று பவானி சாகர் அணையை திறந்து வைத்து அமைச்சர்கள் .முத்துசாமி - மு.பெ.சாமிநாதன் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்து சாமி மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆகியோர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

முதலமைச்சர் எல்.பி.பி. வாய்க்காலின் சீரமைப்பு பணிகளை கண்காணித்து இப்பணிகளை விரைந்து முடித்திடவும் ஆகஸ்ட் 15 அன்று தண்ணீர் திறக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் துரித நடவடிக்கை மேற்கொண்டு சீரமைப்பு பணிகளை முடித்து தண்ணீர் திறந்துவிடும் அளவிற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் முதல்போக பாசனத்திற்கு பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானித்திட்ட பிரதான கால்வாய் ஒற்றைப்படை மதகுகள் மற்றும் சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாய் இரட்டைப்படை மதகுகளின் நன்செய் பாசனத்திற்கு 15.08.2024 முதல் 12.12.2024 முடிய 120 நாட்களுக்கு 23846.41 மி.க. அடிக்கு மிகாமல் தேவைக்கேற்ப தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி இன்றைய தினம் (15.08.2024) ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானி திட்ட பிரதானக்கால்வாயில் ஒற்றைப் படை மதகுகளுக்கும் சென்னசமுத்திரம் பகிர்மானக் கால்வாயில் இரட்டைப்படை மதகுகளுக்கும் தற்போது அணையில் உள்ள நீர் இருப்பு வடகிழக்கு பருவமழை மூலம் எதிர்பார்க்கப்படும் நீர் வரத்து ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கீழ்பவானித் திட்ட பிரதானக் கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீரின் அளவு 200 கன அடி முதல் 2300 கனஅடி வரை படிப்படியாக உயர்த்தப்பட்டு 120 நாட்களுக்கு 23.846 டி.எம்.சி தண்ணீர் வழங்கப்படும். இதில் ஈரோடு மாவட்டத்தில் 91284 ஏக்கர் நிலங்களும் திருப்பூர் மாவட்டம் 10.228 ஏக்கர் நிலங்களும் கரூர் மாவட்டத்தில் 1988 ஏக்கர் நிலங்களும் என மொத்தம் 103500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். அணையில் போதிய அளவு நீர் இருப்பு உள்ளது. மழையும் போதிய அளவு இருக்கிறது. எனவே இந்த தண்ணீர் விவசாயிகளுக்கு சரியான அளவிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே போல் விவசாயிகளின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளை நிறைவு செய்வதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர்கள் பேட்டியளித்தனர்.

## வானிலை முன்னறிவிப்பை வலுப்படுத்த 2 நவீன ரேடார்கள்

# ரூ.50 கோடியில் வானிலை ரேடார்கள் வாங்க டெண்டர்

### இராமநாதபுரம், ஏற்காட்டு -2 இடங்களில் நவீன ரேடார்கள் பொருத்தத் திட்டம்

சென்னை, ஆக.17-

வானிலை முன்னெச்சரிக்கை அமைப்புகளை மேம்படுத்த 50 கோடி ரூபாய் மதிப்பில், நவீன ரேடார்கள் வாங்க தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது.

வானிலை நிலவரங்களை மிகத் துல்லியமாக கணித்து, முன்னெச்சரிக்கைகளை வழங்கும் வகையில் இரண்டு Cபேண்ட் டாப்ளர் ரேடார்கள் வாங்கப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டிருந்தது. மாநில பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 50 கோடி ரூபாய் மதிப்பில் இந்த நவீன ரேடார்களை வாங்கப்பட உள்ளன. இதற்கான முதற்கட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு துரிதப்படுத்தியுள்ளது. அந்த வகையில், சிபேண்ட் டாப்ளர் ரேடார்கள் கொள்முதல் செய்வதற்கான டெண்டர் கோரப்பட்டுள்ளது. இராமநாதபுரம், ஏற்காடு ஆகிய 2 இடங்களில் இந்த ரேடார்களை பொருத்த திட்டமிடப்பட்டுள்ளது.



ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து நேற்று முன்தினம் (15.08.2024) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் கீழ்பவானி பாசனத்திற்கு தண்ணீர் திறந்து வைத்தார்கள்.உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு.நாகரத்தினம், சட்டமன்ற உறுப்பினர்கள் (அந்தியூர்) ஏ.ஜி.வெங்கடாசலம், (மொடக்குறிச்சி) திருமதி.சி.சரஸ்வதி, (அரவக்குறிச்சி) ஆர்.இளங்கோ, ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி.நவமணி கந்தசாமி உட்பட பலர் உள்ளனர்.



திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் ஆத்தூர்குப்பம், கத்தாரி, தோப்பலகுண்டா, சொர்க்காயல்நத்தம், நாயனசெருவு, கொத்தூர், கொண்டகிந்தனப்பள்ளி, பச்சூர், கே.பந்தாரப்பள்ளி ஆகிய ஊராட்சிகளில் மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் திருவண்ணாமலை நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சி.என்.அண்ணாதுரை வாக்களித்து வெற்றி பெற செய்த வாக்காளர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

# தலைவர் கலைஞரின் விழியசைவில், வினை முடித்த வித்தகர்; மாமேதை மாறன்!



நமது திராவிட இயக்கமானது, தென்னிந்திய நல உரிமைச் சங்கம், நீதிக்கட்சி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், என பல்வேறு அமைப்புகளைக் கண்டது. எனினும் இவற்றின் பரந்துபட்ட நோக்கம் ஒன்றே!

தொன்று தொட்ட அதன் வளர்ச்சியில் தமிழ் மொழி காக்கப் போராடி, தமிழர் வாழ்வு மேம்புற ஆட்சியதிகாரம் அடைந்துள்ள இந்நாள் வரை, எண்ணற்ற அறிஞர்கள், மேதைகள், பகுத்தறிவாளர்கள், சுய மரியாதை தீரர்கள், தியாகிகள், படைப்பாளர்கள், பேச்சாளர்கள், மற்றும் கலை இலக்கியம் என ஒவ்வொன்றிலும் தனித்தனியே முத்திரை பதித்த பல வித்தகர்களை நாம் அறிவோம்.

அவர்களுள் “ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்? “ என விளக்கி, திராவிட இயக்க வரலாறு படைத்து, “மாறன் என்றால் சாமான்யமா?” எனத் தென்னாட்டு காந்தி பேறறிஞர் அண்ணா அவர்களால் வியந்து பாராட்டப்பட்டு, படைப்பாளியாகவும், பெரும் படிப்பாளியாகவும் திகழ்ந்த அறிவுலகமேதை முரசொலி மாறன் அவர்களின் 91வது பிறந்தநாள் இன்று.

இந்தியாவின் தென்கோடியில் திருக்குவளைக் கிராமத்தில் பிறந்து, “திக்கெட்டும் புகழ் பெற்று தோகா மாநாட்டில் இந்தியாவின் குரலாய், கொள்கையாய் நீங்கள் பேசப்போவது தான் விளங்கப் போகிறது” என்று அந்நாளைய பிரதமர் ஐ.கே.குஜ்ரால் (இந்தர் குமார் குஜ்ரால்) அவர்களால் உற்சாகப்படுத்தப்பட்டு, “நான் பேச எழும் முன் மனதில் ஆத்தாவையும், தாத்தாவையும் வேண்டிக் கொண்டேன். மாநாட்டில் மற்ற உரைகளைவிட எனது உரையே மிகச் சிறப்பாக அமைந்ததென அனைவரும் பாராட்டினர். என்னவிருந்தாலும் நான் உங்களது தயாரிப்பு, வளர்ப்பு, வார்ப்பு தானே!” என தலைவர் கலைஞர் அவர்களுக்குக் கடிதமெழுதிய கண்ணிய மிக்க கலைஞரின் மாணவர் மாமேதை மாறன் அவர்கள் பிறந்தநாள் இந்த ஆகஸ்ட் 17.

1958 லேயே தனது 24 வது வயதில் “ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?” எனும் ஆராய்ச்சி நூல் இயற்றி, பல வரலாற்று விளக்கங்களைச் சொல்லி, உலகில் எத்தனை நாடுகள், மொழிவாரியாக, இனவாரியாக, காலனி ஆதிக்கத்திலின்று விடுதலையடைந்து, சுதந்திர கீதம் இசைத்தது என்பதனைப் பட்டியலிட்டு அந்நூலில் விளக்கி, ஆதாரங்களோடு, ஆணித்தரமாகச் சொல்லி, உலக வரலாற்று ஆசிரியர்களுக்கு ஒப்பான மதிநுட்பம் வாய்ந்தவராக ஐயா மாறன் அவர்கள் திகழ்ந்தார்.

மரகதம், அன்னையின் ஆணை, குலதெய்வம், எம். ஜி ஆர் ஜெயலலிதா நடித்த எங்கள் தங்கம் போன்ற திரைப் படங்களுக்கு கதை, வசனமெழுதி, தயாரித்து, திரைத்துறையில் இளம் வயதிலேயே முத்திரை பதித்தவர் முரசொலி மாறன் அவர்கள்.

1965 மொழிப்போரில் இந்திய பாதுகாப்புச் சட்டத்தின்படி கைதுசெய்யப்பட்டு பாளைத் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஒரே தலைவர், நமது உயிர்த்தலைவர் கலைஞர் அவர்கள் சிறையில் அடைபட்டிருந்த ஒவ்வொரு நாளையும், “சிறையில் கலைஞர் இன்று 50 ஆவது நாள்!” என ஒவ்வொரு நாளும் பெட்டிச் செய்தியாக முரசொலியில் வெளியிட்டு, உலகிற்குத் தெரிவித்த உத்தியறிந்த பத்திரிக்கையாளர் நமது ஐயா மாறன் அவர்கள்.

1967 ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் விலகிக்கொண்ட தென் சென்னை தொகுதியின் நாடாளுமன்ற வேட்பாளராக அறிஞர் அண்ணா அவர்களால் அறிவிக்கப்பட்டு, மூதறிஞர் ராஜாஜி, காயிதேமில்லத் போன்ற பெரும் தலைவர்களால் முன்மொழிந்து, வழிமொழியப்பட்டு, வெற்றி பெற்று, தனது வாழ்நாளின் இறுதிவரை நாடாளுமன்ற உறுப்பினராக, மிகச் சிறந்த நாடாளுமன்றவாதியாகத் திகழ்ந்தவர் அறிவுலக மேதை ஐயா மாறன் அவர்கள்.

1977 ல் சட்டமன்ற நாடாளுமன்ற தேர்தலின் போது, முரசொலி மாறன் அவர்கள் தென் சென்னை தொகுதியின் வேட்பாளராக தலைவர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டார். பின்னர் அத்தொகுதி காங்கிரஸ் கட்சிக்கு கேரள ஆளுநராக பின்னாளில் இருந்த பா. ராமச்சந்திரனுக்கென வற்புறுத்தப்பட்டபோது, சிறிதும் வருந்தாமல், கூட்டணிக்கு விட்டுக் கொடுத்து, தோழமையின் மாண்பைச் சிறக்கச் செய்தவர் முரசொலி மாறன் அவர்கள்.

1976ல் நெருக்கடி நிலையின் போது, சிறைக் கொட்டடியில் பெரும் தாக்குதலுக்குள்ளாகி, அதன் பாதிப்பு கடைசி காலம்வரை அவரை வருத்தியது எனச்சொல்லுமளவிற்கு சோதனைகளை ஏற்று, வேதனைகளைத் தாங்கிய தலைவர் கலைஞரின் “வீர அபிமன்யு!” மாமேதை மாறன் அவர்கள்.

1989 ல் ஜனநாயகத்தின் பாதுகாவலர் வி. பி. சிங் அவர்களின் தலைமையில் அமைந்த தேசிய முன்னணி அமைச்சரவையில் தி.மு.க.வின் முதல் மத்திய அமைச்சராய் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கேபினட் அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட கூட்டாட்சித் தத்துவத்தின் வெற்றியாளர் முரசொலி மாறன் அவர்கள்.

1996 -ல் மத்திய அமைச்சர். அதற்கும் முன்னே 17 நாட்களே பதவியிலிருந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை கோரிய தீர்மானத்தின் மீது உரையாற்றிய போது, “ A Good Man in Bad Party” என வாஜ்பாய் பற்றி நாகரிகத்தோடு விளித்த நாவன்மைக்கு உரியவர் முரசொலி மாறன் அவர்கள்.

1999 ல் அமைந்த நாடாளுமன்றத்தில் அவைத்தலைவராகத் தேர்வு பெற்ற வி. எம். சி. பாலயோகி வேட்பு மனு தாக்கலுக்கு மூன்று நிமிடங்களுக்கு முன்பு தான் அவரால் ஆந்திராவிலிருந்து வர முடிந்தது. கால தாமதம் ஏற்பட்டிருப்பின் அவரது கனவு கானல்நீராய் போயிருக்கும்.

அவர் அவைத்தலைவராக தேர்வு பெற்றது குறித்து கழகத்தின் சார்பில் வாழ்த்துரைத்தபோது “மூன்று நிமிடங்கள் கடந்திருந்தால், ஒரு திறமையான, தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த பேரவைத் தலைவரை நாம் இழந்திருப்போம். எனவே நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருப்பது ஏர் இந்தியா விமானத்திற்கு தான்” என WE THANK AIR INDIA என ஆங்கிலத்தில் உரைத்த நாவன்மைக்குரியவர் நமது ஐயா முரசொலி மாறன் அவர்கள்.

2001 ஜீன் மாதம் 30 ஆம் தேதி தலைவர் கலைஞர் கைதின் போது நிகழ்த்ததை நினைத்தாலே, நமது நெஞ்சம் உருகும். அக்கொடூர நாளில் தனது உடல், பொருள், ஆவி அனைத்தும் “கலைஞர்! கலைஞர்!” என்று துடித்த இதயம் ஏற்கனவே நலிவுற்றிருந்த நிலையில் ஜெயலலிதாவின் கொடிய கல்நெஞ்சக் காவலர்கள் மாறன் அவர்களை அலைக்கழித்து, அடித்து, வதைத்து, துவைத்து, ஆடைகளை அலங்கோலப்படுத்தியும் அவற்றை பொருட்படுத்தாமல், தன்னுயிர் ஈந்தும், தனது தலைவரைக் காக்க பட்ட ரணங்களாலன்றோ, அவர் பட்ட மரமாய் நோயில் வீழ்ந்தார்.

முரசொலி மாறன் அவர்கள் குழந்தையாய் இருந்தபோது கடும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டார்.

**வழக்கறிஞர் வெ.அன்புவாணன்**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என குடும்பமே அஞ்சிய போது, தலைவர் கலைஞர் அவர்கள் அவரை தனது தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு, தனது பெரியன்னை கல்லறையில் குழந்தையைக் கிடத்தி, “பெரியம்மா காப்பாத்து! பெரியம்மா காப்பாத்து!“ என்று கதறினார்.

உலகில் எத்தனை, எத்தனை உறவுகளை நாம் காண்கிறோம்.

ஆனால் தாய்மாமன் மருமகன் உறவின் மகத்துவத்தை வேறெங்கும் காணாத வகையில் அமைந்தது கலைஞர் மாறன் உறவு.

புராணத்தில் கூட ஒரு மாமன் மருமகன் உறவு இருந்ததாகச் சொல்கிறார்கள். கம்சன் கண்ணன் உயிரை வாங்கிய உன்னத (?) உறவு.

நமது இயக்கத்தில் நம் கண்ணெதிரிலேயே பிறந்தது முதல், மறையும் நாள் வரை, நம் தலைவருக்கு, அவரது பாசமாமாவின் கண்களுக்கு இமையாய், இதயத்திற்குத் துடிப்பாய், தோல்வியில், துயரத்தில் சாய்ந்து கொள்ளும் தோளாய், இறுதிவரை தனது தலைவர் மீது துரும்புகூட படாமல் தடுக்க தடியடி பட்டு, கொடும் இதயநோய்க்கு ஆளாகி இறுதியில் மறைந்தே போனார் கலைஞரின் மாசறு பொன்னான, வலம்புரி முத்தான பாச மருமகன் மாமேதை மாறன் அவர்கள்.

கால் முளைத்த நாள் முதலாய் தலைவரின் கரம்பற்றி, தடம் மாறாமல் அறிவை வளர்த்து, புவியியல், வாழ்க்கை வரலாறு, பொது வரலாறு, தமிழக வரலாறு, திராவிட இயக்க வரலாறு, இந்திய வரலாறு, பொருளாதாரம், தமிழ் இலக்கியம், ஆங்கில இலக்கியம், கவிதை, அரசியல், இந்திய அரசியல், சமூகவியல், கம்பெனி சட்டங்கள், சினிமா, விளையாட்டு, தமிழ் பண்பாடு, போன்ற 20 க்கும் மேற்பட்ட தலைப்புகளில் அமைந்த 10000 க்கும் மேற்பட்ட புத்தகங்களைப் படித்தறிந்த பெரும் படிப்பாளி முரசொலி மாறன் அவர்கள்.

இத்தகு சிறப்புகள் ஒருங்கே பெற்ற
பெரும் படிப்பாளி!
தரமான படைப்பாளி!
சிறந்த நாடாளுமன்றவாதி!
தேர்ந்த எழுத்தாளர்!
தீர்க்கமான சிந்தனையாளர்!
தியாகத் திருவிளக்கு!


தியாகராஜ சுந்தரம் எனும் பெயர் கொண்ட எழில் நிறை மாறன்!

எல்லாவற்றுக்கும் மேலாய் நமது அன்புத் தலைவர் கலைஞரின் மனசாட்சியாய், தலைவரின் விழியசைவில் வினை முடித்த வெற்றிவீரனாய் திகழ்ந்த மாமேதை மாறன் அவர்களின் பிறந்தநாள் இன்று.

ஆதிநாள் தொட்டு அகரம் பயின்ற நாள்முதல் பின்னாளில் இந்திய நாடாளுமன்றத்தின் மிகச் சிறந்த நாடாளுமன்றவாதி என போற்றப்பட்ட சிகரம் தொட்ட நாள் வரை தான் உயிராய் நேசித்ததலைவர்கலைஞரின்உள்மனம் அறிந்து, உணர்வுகளை உணர்ந்து, கழகத்தின் முக்கிய மூளையாய் வஞ்சக சகுனிகள் மிகுந்த டெல்லியில் தலைவர் கலைஞரின் வாளாய், வார்த்தையாய், வார்ப்படமாய் திகழ்ந்த தியாகத் தொண்டர் முரசொலி மாறன் அவர்கள்.

வடநாட்டுத் தலைவர்கள் ஜெகஜீவன்ராம், ஷேக் அப்துல்லா, அவரது மகன் பரூக் அப்துல்லா, பகுகுணா, இந்திராகாந்தி, வாஜ்பாய், ஜார்ஜ் பெர்ணான்டஸ், சரண்சிங், வி.பி.சிங், போன்ற தலைவர்களோடு கழகத்திற்கும், கலைஞருக்கும் நெருக்கமான இணக்கம் ஏற்பட பெரிதும் உழைத்த அரசியல் ராஜதந்திரி மாமேதை மாறன் அவர்கள்!

அவர் இறந்த 2003 நவம்பர் 23 அன்று அவரது திருவுடல் அருகே அமர்ந்து தலைவர் கலைஞர் கண்ணீர் வடித்த காட்சி முரசொலியை, தனது முதற்பிள்ளையை, மனசாட்சியை, கண்ணின் கருமணியை, உறுதிமிக்க தொண்டனை, துணைவனை மொத்தமாய் இழந்த சோகம் மிகுந்தன்றோ காணப்பட்டது.



அவரது திருவுருவப் படத்திறப்பு விழாவில் பேசிய தலைவர் கலைஞர், “எல்லோரும் இங்கு இருக்கிறீர்கள். ஆனால் ‘உள்ளேன் ஐயா’ என்று சொல்ல கண்மணி மாறன் இல்லையே!” என்று கலங்கினார்.

இன்று தலைவர் கலைஞரும் இல்லை. ஆனால் அவரின் ஆற்றல், இராஜதந்திரம், ஆளுமைத் திறன் கொண்டு தமிழ்நாட்டில் மாற்றார் மலைக்கும்படி, ஏழையர், பெற்றோர்,முதியோர், தொழிலாளர், அரசு ஊழியர்கள், மாணவர், இளைஞர்கள் போற்றும் சீர் மிகு திராவிட மாடல் ஆட்சியை வழங்குகிறார். நமது திராவிட தமிழினத் தளபதியவர்கள்.

டெல்லிக்கு டி. ஆர். பாலு, கனிமொழி கருணாநிதி, ஆ. ராசா, தயாநிதி மாறன், திருச்சி சிவா, தமிழச்சி தங்க பாண்டியன் எனத் தரம் பிரித்து கழகத்தின் கொள்கை, குரலாக ஒலிக்கச் செய்யும் தலைவர், தமிழ்நாட்டில் தனது தளராத, தயங்காத மக்கள் பணியில் தன்னோடு, இளைஞர்கள் ஏற்றிப் போற்றும் அமைச்சர் உதயநிதி அவர்களையும் தமிழ்நாடு முழுவதும் வலம் வரச்செய்து மக்கள் நலம் பல பெற வழிவகை செய்கிறார்.

அன்று ஐயா மாறன் போன்றோரின் கடின உழைப்பு! தியாகம்! அர்ப்பணிப்பு! இவற்றால் வளர்ந்த இயக்கம். இன்று மாநிலக்கட்சியாக இருந்தாலும் ஒன்றிய ஆட்சியைத் தீர்மானிக்கும் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தலைவர் கலைஞர் காலம் போன்றே!

அந்தத் தலைவரை தனது உயிராய் நேசித்து, தியாகமாறனாய் வாழ்ந்த தலைவர் கலைஞரின் மனசாட்சி! கழகத்தின் முக்கிய மூளை, இயக்கத்தின் சுவாசம்! கலைஞர் வளர்த்த கொள்கைத்தங்கம் அறிவுநிறை, அழகு நிறை அறிவுலகமேதை ஐயா மாறன் அவர்களின் 91 வது பிறந்த நாளான ஆகஸ்ட் 17 அன்று அவரை பேராற்றல் மிக்கவராய் வடித்தெடுத்த உலைக்களமாம் முரசொலி வளாகத்தில் அமைந்துள்ள ஐயாவின் ஆளுயர திருவுருவச் சிலைக்கு தலைவர் கலைஞரின் வழியில் கழகத்தினர் மாலையணிவித்து, புகழ் சேர்க்கின்றனர்.

ஓங்குக அறிவுலகமேதை ஐயா முரசொலி மாறன் அவர்களின் பெரும் புகழ்!!